9th July 1962]

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அதைப்பற்றி இப்பொழுது முடிவு ஒன்றும் இல்லை. தனியாகக் கேள்வி கேட்டால் பதில் சொல்லலாம்.

Selections for Government service (police verification)

* 196 *Q.*—Sri A. K. SUBBIAH : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether persons belonging to certain political parties are debarred from selections for the posts for which verification by the police is conducted before a candidate is appointed; and

(*b*) if so, the details of the same?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) No, Sir.
(*b*) Does not arise.

The Cauvery basin (oil)

* 197 *Q.*—Sri M. KALYANASUNDARAM :
Sri RAMA ARANGANNAL :
Sri A. K. SUBBIAH :
Sri K. A. MATHIALAGAN :
} **Will the Hon.**

the Minister for Industries be pleased to state the present stage of the scheme for exploration of oil in the Cauvery basin?

The Hon. Sri R. VENKATARAMAN : Seismic survey of certain portions of the Cauvery basin carried on by the Oil and Natural Gas Commission of the Government of India is still in progress and is likely to continue for some more time.

திரு. சா. கணேசன்: தேவக்கோட்டை பகுதியில் இது மாதிரி எண்ணெய் வளம் நிரம்ப இருக்கிறது என்று அந்த ரெவின்யூ டிவிஷனல் ஆபீசர் எண்ணெயின் மாதிரியையும் அரசாங்கத்திற்கு அனுப்பியிருந்தார் என்று செய்திகள் வந்தன. அதுபற்றி ஏதாவது நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறதா? அதனுடைய பயன் என்ன? விளைவு என்ன என்று அரசாங்கம் கருதுகிறது?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்தமாதிரி தகவல் ஜியலாஜிகல் டிபார்ட்மெண்டிலிருந்து வரவில்லை. ரெவின்யூ டிவிஷனல் ஆபீஸரிடமிருந்து வருவதைப் பொறுத்தவரையில் நாம் ஒன்றும் செய்ய முடியாது. இப்பொழுது நமக்கு இருக்கின்ற தகவல் பூராவும், 'காவிரி பேஸின்' என்று சொல்கிற தஞ்சை ஜில்லாவும், திருச்சி ஜில்லாவின் ஒரு பகுதியும், வங்காளக்குடா அருகிலுள்ள பகுதியும்தான். இவைதான் எண்ணெய் இருக்கக்கூடிய இடங்கள் என்று சொல்லப்படுகிறது.

திரு. சா. கணேசன் : நில நூல் வல்லுநர்கள் முடிவுதான் சரியானது என்பதை நான் மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்கிறேன். ஆனால், அவர்கள் சென்று காணவோ கவனிக்கவோ முடியாத இடங்களிலே, 'இத்தகைய வாய்ப்புகள் இருக்கின்றன' என்று அரசாங்க அதிகாரிகள் எடுத்துக் காட்டுவார்களானால், அதை நில

[9th July 1962

நூல் வல்லுநர்களைக் கொண்டு சோதிப்பது பலனுடையதாக இருக்கும் என்பதை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கனம் அங்கத்தினர் மீண்டும் கேள்வி கேட்டதினால், அதில் இருக்கும் அபத்தத்தை விளக்க விரும்புகிறேன். சாதாரணமாக, எண்ணெய் பத்தாயிரம் அடிக்குக் கீழ்தான் இருக்கும். கிணற்றிலே எண்ணெய் கிடைக்குமென்று நினைத்தால் அது சரியான, பூகர்ப்ப ஆராய்ச்சிக்கு ஒத்த அபிப்பிராயம் அல்ல. அதனால், யாராவது—எந்த ரெவினியூ அதிகாரியாவது—கிணறு தோண்டி, பத்து அடியிலே எண்ணெய் எடுத்திருக்கிறோம் என்று சொல்லி, அதை விசாரணை செய்யவேண்டுமென்றால், அதற்காகப் பணத்தைச் செலவழித்து ஒரு பூகர்ப்ப ஆராய்ச்சி செய்வது சரியாக இருக்காது.

திரு. கே. ஏ. மதியழகன் : பூகர்ப்ப ஆராய்ச்சி பற்றி கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். காவிரி வட்ட எண்ணெயைப்பற்றிகூட, சோவியத் ஆராய்ச்சியாளர்கள் தான் முதலில் கண்டு பிடித்தார்கள். நம்முடைய பூகர்ப்ப ஆராய்ச்சியாளரைக் கொண்டு பரிசீலனை செய்யப்படுகிறது என்று சொன்னார்கள். இந்த அளவு மந்தம் இருக்கிற காரணத்தால், நம்முடைய பூகர்ப்ப ஆராய்ச்சி இலாகா பணிகளைத் துரிதப்படுத்தி, இன்னும் காரியங்களைச் செய்யவேண்டுமென்று வற்புறுத்த இந்த சர்க்கார் முயற்சிக்குமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இந்த ஆராய்ச்சி இரண்டு, மூன்று விதமாக நடைபெறுகிறது. முதலிலே 'மாக்னெடிக் ஸர்வே' என்ற ஒன்று செய்வார்கள். அது எந்த இடங்களிலே எண்ணெய் இருக்கலாம் என்று யூகிக்கக்கூடிய ஆராய்ச்சி; அதற்குப் பிறகு 'Seismic Survey' என்பதைச் செய்வார்கள். அதைச் செய்கிறபோது, வெடி வைத்து பல இடங்களில் வெடித்துப் பார்ப்பார்கள். வெடிக்கின்ற அலைகள் எந்த இடத்திலாவது முட்டுபட்டு திரும்பி எந்தக் கோணத்தில் வருகிறது என்று கணக்குப் பார்த்து, அந்த இடங்களிலே அடுத்தபடியாக எண்ணெய் இருக்கலாமா என்று ஆராய்ச்சி செய்வார்கள். நம்முடைய இன்ஜினியர்கள்தான் இந்த 'Seismic Survey' செய்வது. அதற்கான எல்லாவித உபகரணங்களும் நம்மிடத்தில் இருக்கின்றன. அந்த சர்வேதான் இப்பொழுது நடந்து கொண்டிருக்கிறது.

9-30 a.m. **திரு. இராம அரங்கண்ணல் :** கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் காவேரி டெல்டாவில் எண்ணெய் எடுப்பதுபற்றிக் குறிப்பிடப்பட்டு இருந்தது. இந்த ஆண்டு அது குறிப்பிடப்படவில்லை. இந்த நிதி நிலை ஆண்டுக்குள்ளாவது ஏதாவது முடிவுகள் ஏற்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : ஆங்கிலத்தில் 'Struck the Oil' என்று சொல்வார்கள். எண்ணெய் கிடைப்பது என்பது ஓர் அதிருஷ்டமான விஷயம். இந்த ஆண்டுக்குள் வருமா என்பது நம்முடைய அதிருஷ்டத்தைப் பொறுத்தது.

9th July 1962]

திரு. கே.ஆர். ஆர்.எம். கரியமாணிக்கம் அம்பலம்: கரைக்குடிக்கு அருகில் கிணற்றில் மண்ணெண்ணெய் கிடைக்கிறதென்று சொல்லப்பட்ட தகவலை தேவக்கோட்டை ஆர்.டி.ஓ. அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரவில்லையா என்று அறிய விரும்புகிறேன். அப்படிக் கொண்டுவந்திருந்தால் அதன்பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அம்மாதிரி தகவல் என்னிடத்தில் இல்லை.

Electricity

* 199 *Q.*—Sri V. KRISHNAMOORTHY: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the electric power generated in the State at present is adequate for domestic and industrial purposes; and

(*b*) if not, what steps have been taken to make this State self-sufficient in electric supply?

The Hon. Sri R. VENKATARAMAN: (*a*) Under normal working conditions, the power generated in the State is not adequate for domestic and industrial purposes.

(*b*) More Hydro-Electric Projects are being taken up under the Third Five-Year Plan to increase the installed capacity of the Madras Grid from 571 M.W. to 1,131 M.W. Power to the extent of about 200 M.W. will be made available to the Madras Grid from Neyveli Thermal Plant. Hogenakkal Hydro-Electric Scheme for generating 800 M.W. is under consideration. The Government of India have been requested to set up an atomic power plant in this State.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: மின்சாரம் போதுமான அளவு கிடைக்காத காரணத்தினால் தமிழகத்தில் இருக்கிற பெரிய பெரிய தொழிற்சாலைகள் தங்கள் தங்கள் தேவைக்கு மின்சாரத்தைப் பெற ஜெனரேட்டர்கள் சொந்தத்தில் வைத்துக்கொள்ள அரசாங்கம் அனுமதிக்குமா ? சூரிய வெளிச்சத்தின் மூலம் மின்சாரத்தைத் தயாரிக்கும் ஒரு முறை இருக்கிறது. அந்த முறையைச் சர்க்கார் கவனித்துப் பரிட்சார்த்த திட்டமாகவாவது அங்கங்கே வீடுகளில் வைத்துக்கொள்வதுபற்றி முயற்சி செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அதற்குச் சர்க்கார் அனுமதி ஒன்றும் தேவையில்லை. ஏற்கனவே தனியார் தொழிற்சாலைகளில், கம்பெனிகளில் ஜெனரேட்டர்கள் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். மின்சாரவெட்டு ஏற்படும்போது அதை உபயோகிக்கிறார்கள். இந்த ஜெனரேட்டர்கள் மூலம் கிடைக்கிற மின்சாரத்திற்கு அதிகச் செலவு ஆவதால் அதை எப்போதும் உபயோகிப்பது இயலாது. சூரிய வெளிச்சத்தின் மூலம் மின்சாரம் தயாரிப்பது லாபரெட்டரி மூலம் செய்வதுதானேயொழிய இன்னும் ஒரு நாட்டிலும் அதை உபயோகத்திற்குக் கொண்டுவரவில்லை.